உ

ஸ்ரீராமஜெயம்.

நன்மைதீமை அறியும்படியாய்

சகாதேவர் அருளிச்செய்த

தொடுகுறி சாஸ்திரம்.

உத்தமமத்திமசாஸ்திரமும் அடங்கியிருக்கின்றன.

இச்சக்கரத்தில்கண்ட ஓர் நெம்பரைத்தொட்டு

அந்நெம்பருடைய பாடலைவாசிக்க

நன்மைதீமை அறியலாம்.

111	112	113	114	121	122	123	124
131	132	133	134	141	142	143	144
211	212	213	214	221	222	223	224
231	232	233	234	241	242	243	244
311	312	313	314	321	322	323	324
331	332	333	334	341	342	343	344
411	412	413	414	421	422	423	424
431	432	433	434	441	442	443	444

சென்னை சூளை:

பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1893

இதன் விலை அணா 1.

சென்னை சூளை ஜெர்பாட.

உ

பரமபதிதுணை.

தொடுகுறிசாஸ்திரம்.

இஃது
ஓரியாபாஷையிற் சொல்லியிருந்ததை
மதுரை - ம-ள-ள-ஸ்ரீ,
சோமசுந்தரம்பிள்ளையவர்கள் குமாரர்
ம-ள-ள-ஸ்ரீ, வீரபத்திரதாஸரவர்களால்
தமிழ்ப்பாடலாக இயற்றியது.

ஷை யூர்,
புஸ்தகவியாபாரம்
S. முத்தையாபிள்ளையவர்கள்
கேட்டுக்கொண்டபடி

ஆனூர் - சுப்பராயமுதலியார் குமாரர்
எதிராஜமுதலியாரவர்களால்
தமது
சென்னை குளை:
பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் அச்சுயந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

விஜயஸு கார்த்திகைமீ.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

சகாதேவர் அருளிச்செய்த

தொடுகுறி சாஸ்திரம்.

நன்மை தீமை அறியும்படியான சக்கரம்.

ககக	ககஉ	கக௩	கக௪	கஉக	கஉஉ	கஉ௩	கஉ௪
க௩க	க௩உ	க௩௩	க௩௪	க௪க	க௪உ	க௪௩	க௪௪
உகக	உகஉ	உக௩	உக௪	உஉக	உஉஉ	உஉ௩	உஉ௪
உ௩க	உ௩உ	உ௩௩	உ௩௪	உ௪க	உ௪உ	உ௪௩	உ௪௪
௩கக	௩கஉ	௩க௩	௩க௪	௩உக	௩உஉ	௩உ௩	௩உ௪
௩௩க	௩௩உ	௩௩௩	௩௩௪	௩௪க	௩௪உ	௩௪௩	௩௪௪
௪கக	௪கஉ	௪க௩	௪க௪	௪உக	௪உஉ	௪உ௩	௪உ௪
௪௩க	௪௩உ	௪௩௩	௪௩௪	௪௪க	௪௪உ	௪௪௩	௪௪௪

காப்பு - விருத்தம்.

சீராரும்புவியோர்கள் நன்மைதீமைகளறிந்து
செழிப்புற்றுய்யப்
பேராருந்தொடுகுறியாஞ் சாஸ்திரத்தைநற்றமிழாற்
பேசுதற்குத்
தாராருமிருகோடான் நால்வாயைங்கரமாறு
தலையான்செய்யக்
காராருமேழ்மதத்தான் சித்திவிநாயகனிருதாள்
காப்பாம்மாதோ.

பலனுதவுந்தொடுகுறியாஞ் சாஸ்திரத்தைப்
பாண்டவரிற்சகாதேவ பூபன்கூறி
இலகுமொரியாபாஷை யதனிற்கட்டுண்
டிருந்தவிதனைச்சிலரா லாய்ந்தெடுத்து
துலங்குபுகழ்மதுரைதனில் வாழ்மீனாக்ஷி
சுந்தரதாசற்கிளைய வீரபத்திரன்
நலமுலவுஞ்செந்தமிழா லுரைத்தேனிந்த
நனிநூலின்பிழைபொறுப்பீர் செகத்தினோரே.

111-ககக-வது விருத்தம்.

வரைநூற்றுப்பதினொன்று மிலக்கந்தன்னை
மகிழ்வாயோர்மலராலே தொடுவாயாகில்
தரைமீதுநீநினைத்த காரியங்கள்
தடையின்றிச்செயமாகும் பகையைவெல்வாய்
விரைசேருமோர்வருடங் குறைகளில்லை
வித்தகனேநின்வீட்டுக் காரியங்கள்
நிரைவேறுமிக்குறியை யறியச்சாட்சி
நின்வலதுபுயத்தில்மச்ச மிருக்கும்பாரே.

(வ-ம்) நீ நினைத்தகாரியஞ்செயமாகும், எதிரியை வெல்வாய், நீ தொட்டசமயமும் நல்ல சமயமாகவிருக்கிறது. உன்வீட்டுக்காரியமுங் கைகூடும், இந்தராசி உனக்கு ஒருவருஷகாலம் வரையி லனுகூலமாக விருக்கிறது. இதற்குச் சாட்சி உன் வலது புயத்தின்பேரில் மச்சமிருக்கும் பார்த்துக்கொள்வாயாக உத்தமம். (1)

112-ககஉ-வது.

சதமுடனேபன்னிரண்டா மிலக்கந்தன்னைச்
சற்குணனேதொட்டதற்குக் காரணங்கேள்

இதயமதில்நீநினைத்த காரியங்க
ளெளிதிற்கைகூடாதுன் மனைவியென்பாள்
நிதநடுவிற்றூதாயிங் கிருப்பதாலே
நின்கருத்துப்போன்முடிய வெகுநாட்செல்லும்
பதமுதவுமுனதுகுல தேவதைக்குப்
பண்புடனேபூசையிட்டு வேண்டிக்கொள்ளே.

(வ-ம்) நீ நல்லகாரியத்தை மனதில் நினைத்துத் தொட்டதால், அந்தக்காரியங் கைகூடாது. ஏனென்றால், உன் பெண்சாதி நடுவில் தூதாயிருக்கின்றாள். அந்தக்காரியம் தாமதத்தில் முடியும். குலதேவதைக்குப் பூசைசெய்வாயாக. (2)

113-கககூ-வது.

பகர்நூற்றுப்பதின்மூன்று மிலக்கந்தன்னைப்
பண்புடன்நீதொட்டதற்கு விபரங்கேளாய்
தகமைபெறும்புத்திரசம் பத்துண்டாகுந்
தனஞ்சேருங்கனஞ்சேருங் குறைகளில்லை
அகக்கவலையாவுமுன்னை விட்டுநீங்கி
யப்பனேசுகமாக வாழ்வாயிந்தச்
செகமீதிலொன்றுக்கு மஞ்சவேண்டாஞ்
செயகாலமிதுவெனவே யறிந்துகொள்ளே.

(வ-ம்) நீ தொட்டகுறி தனலாபங்கிடைக்கும். புத்திரபாக்கிய முண்டாகும். மனக்கவலை நீங்கிச் சந்தோஷமடைவாய். உன் கிரகங்கள் நல்லதாயிருக்கின்றது. அதனாற் சுகமுண்டு உத்தமம். (3)

114-ககச-வது.

நன்மையுதவும்நூற்றுப் பதினான்கென்னும்
லக்கமதைத்தொட்டதற்கு ஞாயங்கேளாய்

துன்பமெலாமின்றுடனே விலகிப்போகுஞ்
சுகமுண்டாம்வியாபார லாபமுண்டாம்
உன்மனதில்நினைத்திட்ட காரியங்க
ளுத்தமனேமுடியுமொரு சிநேகனாலே
தன்மையுடன்மூன்றுமா தத்தின்பின்புச்
சற்குருவானவர்வருவார் பலனுண்டாமே.

(வ-ம்) நீ நினைத்தகாரிய மொருசிநேகனால் முடிவாகும். நீ செய்யுந்தொழிலி லதிகலாபங்கிடைக்கும். இன்னம்மூன்று மாதஞ் சென்றபின்பு குருவானவர் நல்லவீட்டில் வருகிறார், சகலமும் நன்மையாகும். (4)

121-கஉக-வது.

நிச்சயமாய்நூற்றியிரு பதிேனொன்றை
நீதொட்டாயதற்குபல நிகழ்த்தக்கேளாய்
அச்சமில்லையுன்சொல்லை நம்புவார்க
ளையனேவியாபார விர்த்தியாகும்
பட்சமிகுஞ்சிநேகிதனா லுதவியுண்டாம்
பாரிலுனக்கென்னாளுங் குறைவராது
கச்சமுடனுனதுகுல தேவதைக்குக்
கனபூஜைதனைச்செய்து வேண்டுவாயே.

(வ-ம்) நீ தொட்டலக்கத்தினாலே மனவியாகூலந் தீரும். ஒரு சிநேகிதனா லுதவியுண்டாகும், அதிகலாபங் கிடைக்கு முனது குலதேவதைக்குப் பூசைசெய்யச் சகலமுங் கைகூடும் உத்தமம். (5)

122-கஉஉ-வது.

ஐயனேநூற்றியிரு பத்திரண்டை
யாவலுடன்தொட்டதற்குக் காரணங்கேள்

கைவிட்டுப்போனபொருள் வந்துசேருங்
காரியங்களனுகூல மாகுமுண்மை
செய்கின்றவியாபாரம் விர்த்தியாகுஞ்
சினேகிதனையொருபோதும் நம்பவேண்டாம்
வையமதிலுண்மையுடன் பேசியுன்னை
வகைமோசஞ்செய்திடுவா ரறிந்துகொள்ளே.

(வ-ம்) நீ நினைத்தகாரியம் பலிக்கும். வியாபாரம் விர்த்தியாகும், கைவிட்டுப் போனபொருள் வந்துசேரும், சினேகிதனை நம்பவேண்டாம், நல்லவராகப் பேசி யுன்னை மோசஞ் செய்திடுவார் அறிவாயாக. (6)

123-கஉஙு-வது.

வந்தனையாய்நூற்றியிரு பத்துமூன்றை
மனதாரத்தொட்டதற்குக் காரணங்கேள்
சிந்தனைகளேதுமில்லை சுகம்பெற்றுய்வாய்
சேர்ந்தபந்துமித்திரருக்கேறகாச்செய்கை
உந்தனிடமிருக்குதகை நீக்கிவிட்டால்
உறவின்முறையார்களுன்னைப்பகைக்கமாட்டார்
சந்தோஷசமாசார மைந்துநாளிற்
சற்குணனேவருமதனைக் கண்டுகொள்ளே.

(வ-ம்) இப்போது நீ தொட்டகுறியினாலே உன் மனக்கவலை நீங்கும். ஆனாலுன்னிடத்திலொரு கெட்டசெய்கை யிருக்கின்றது. அதனாலுன்னுடைய பந்துக்களுக்கு விரோதியாகின்றாய், அந்தச்செய்கையை நீக்கிவிட்டா லின்னமைந்துதினத்திற்குள் வெளியூரிலிருந்து நல்ல செய்திவரும் சந்தோஷமடைவாய் உத்தமம். (7)

124-கஉச-வது.

உண்மையுடன்நூற்றியிரு பத்துநான்கென்
றோதுமிந்தலக்கமதைத் தொட்டதற்குத்

திண்பாரிற்பகையானோ ருறவேயாவார்
செய்கின்றதொழிலுமினி விர்த்தியாகும்
நண்பனேகையிழந்த பொருளுஞ்சேரும்
நஷ்டமில்லையாதுக்கு மஞ்சவேண்டாம்
பண்புடனேநீநினைத்த காரியங்கள்
பாரப்பாயிவ்வருட முடியும்பாரே.

(வ-ம்) இனியுனக்குக் குறைவில்லை. பகையாயிருந்தவர்களுறவாவார்கள். உன்னைவிட்டுப்போனபொருள்வந்துசேரும். நீ செய்கின்றதொழிலும் விர்த்தியாகும். நீ நினைத்தகாரிய மிந்தவருடத்தில்முடியும். குலவிர்த்தியாகும் உத்தமம். (8)

131-கஙக-வது.

பங்கமறவேநூற்று முப்பத்தொன்றைப்
பாக்கியனேதொட்டதற்குக் காரணங்கேள்
சங்கடங்களில்லையப்பா சுகமாய்வாழ்வாய்
தரைமீதுநீநினைத்த காரியங்கள்
மங்களஞ்சேரோர்பெண்ணால் முடியுமுண்மை
மனக்கவலைகொள்ளாதே குறைகளில்லை
பொங்கமுடன்நவக்கிரக பூசைசெய்தாற்
புண்ணியனே ஜெயமடைவாய் கண்டுகொள்ளே.

(வ-ம்) நீ தொட்ட குறியால் ஜெயமாகும். நீயுன் மனதிலொரு காரியம் நினைத்திருக்கின்றா யந்தக்காரிய மொருபெண்ணினால் முடியுமானதினாலே நீ நவக்கிரக பூசைசெய்து வருவாயாக. (9)

132-கஙஉ-வது.

காதலுடன் நூற்றுமுப்பத் திரண்டாமெண்ணைக்
கனவானேதொட்டதற்குக் காரணங்கேள்

பேதகமுண்டாம்பொருளும் நஷ்டமாகும்
பெண்டிரும்பகையாவாள் சோம்பலுண்டாம்
மாதனையிலுனதுசொல்லை யாரும்நம்பார்
மனவருத்தமுண்டாகு மறிவுகுன்றுஞ்
சாதனையாந்தொழில்தனக்கு மிடர்கள்வந்து
சம்பவிக்குந்தேகமதிற் பிணியுண்டாமே.

(வ-ம்) நீ நினைத்தகாரியமாகாது. பொருள்நஷ்டமாகும். தேகசோம்பலுண்டாகிப் பிணிவந்துசம்பவிக்கும். உன்பெண்சாதியும்பகையாவாள். நீ செய்தொழிலுங் கைவிட்டுப்போகும். இது மத்திமம். (10)

133-௧௩௩-வது.

உற்றபுகழ் நூற்றுமுப் பத்துமூன்றை
யுறுதியுடன்தொட்டதற்குக் காரணங்கேள்
குற்றமில்லைப்பெரியோர்க ளுதவியாவார்
குறித்திடுமுன்காரியங்க ளனுகூலங்காண்
பற்றறவேயெதிரிகளை வெல்வாயப்பா
பயமில்லைஜெயகால மிதுவேயாகும்
நற்றவஞ்சேருனதுகுல தேவதைக்கு
நலமுடனேபூசையிட்டு வேண்டிக்கொள்ளே.

(வ-ம்) நீ நினைத்தகாரியஞ்செயமாகும். பெரியோர்களுதவியுண்டாகும். உனக்கெதிரியாயிருப்பவர்களை வெல்வாய். ஆனதினாலேயே யுன்குலதேவதைகளுக்குப் பூசைசெய்து வேண்டிக்கொள்வாயாக உத்தமம். (11)

134-௧௩௪-வது.

துரிதமுடன் நூற்றுமுப் பத்துநான்காந்
திகையதைநீதொட்டதற்குப் பலனைக்கேளாய்

பிரியமுடன்புத்திரரைப் பெற்றுவாழ்வாய்
பிசகில்லையணுவளவுங் குறைவிராது
பரிந்துவருமெதிரிகளும் விலகிநிற்பார்
பார்மீதுசெய்தொழிலும் விர்த்தியாகும்
தெரிந்துகொள்வாய்பெரியோர்க ளுதவியாவார்
தேகத்தின்பீடைவிட்டு நீங்கும்பாரே.

(வ-ம்) நினைத்தகாரியஞ்செயமாகும். வியாபாரம் விர்த்தியாகும். உன்னெதிரிகளெல்லாம் விலகிப்போவார்கள். உன் தேகபீடைநீங்கும். புத்திரபாக்கியமுண்டாகும். இதுகளெல்லாம் நாளுக்குநாள் சித்தியாகும். நம்புவாயாக உத்தமம். (12)

141-௧௪௧-வது.

வஞ்சமறவேநூற்று நாற்பத்தொன்றை
மாவேகமாகவேநீ தொட்டதற்குச்
சஞ்சலங்களேதுமில்லை பயப்படாதே
தமயனொடுதம்பியரு முறவேயாவார்
மிஞ்சிவரும்பகைவர்களு முறவேயாவார்
விவாகமினிமுடியுமிதற் கையமில்லை
அஞ்சலெனப்பந்துசன முறவாவார்க
ளையனேதொழில்விர்த்தி யாகும்பாரே.

(வ-ம்) நீ நினைத்துவந்த கல்யாணகாரியமுடியும். தனலாபங்கிடைக்கும். பகைபாயிருந்த அண்ணன்தம்பிகளுமுறவாவார்கள். உன் பந்துக்களுமுறவாவார்கள். நீ தைரியம்விடவேண்டாம், ஒருவர் தாட்சண்யமில்லாமல் நடத்தலாம் உத்தமம். ()

142-௧௪௨-வது.

ஐயமறநூற்றுநாற் பத்திரண்டை
யாவலுடன்றொட்டதற்குக் காரணங்கேள்

வையமதிற்செல்வமிகப் பெற்றுவாழ்வாய்
மங்களகல்யாணமினி முடியுமப்பா
செய்யபுகழ்ச்சினேகிதனை நம்பவேண்டாஞ்
சினேகிதனைநம்பிமுன்னாள் மோசம்போனாய்
தெய்வபலமுண்டுனக்கு வீட்டைக்காப்பாய்
செல்வனேதேவதைக்குப் பூசைசெய்யே.

(வ-ம்) நீதொட்டலக்கத்தினால் தனலாபங்கிடைக்கும். விவாகங்கூடும். ஆனால் நீ யொருசினேகிதனை நம்பியிருக்கின்றாய். அவன் கெட்டயெண்ணங் கொண்டிருக்கின்றான், அவனை முற்றிலும்நம்பாதே, ஏனெனில் நீ முன்னொருதடவை மோசம்போயிருக்கின்றாய். வீட்டில் ஞாபகமாயிரு உன்தேவதைக்குப் பூசைசெய்தால் சகலமும் நன்மையாகும். (14)

143-கசஙு-வது.

நூற்றுநாற்பத்திரண்டை நோக்கிநீதொட்டதற்குத்
தோற்றிடும்பொருளுஞ்சேருஞ் சுகமுடன்வாழ்வாயப்பா
சாற்றிடுஞ்சினேகனாலே சஞ்சலந்தீருமுண்மை
போற்றிநின்தேவதைக்குப் பூசைகள்செய்குவாயே.

(வ-ம்) நினைத்தகாரியஞ் செயமாகும். நல்ல தருமசிந்தனையுள்ளசினேகனாலே உதவியுண்டாகும் மனக்கவலைதீரும். தனலாபங்கிடைக்கும். நீ யுனது குலதேவதைக்குப் பூசைசெய்தால் சகலமுங் கைகூடும் உத்தமம். (15)

144-கசச-வது.

போதமுடன்நூற்றுநாற் பத்துநான்கைப்
புரவலனேதொட்டதற்கு விபரங்கேளாய்
பாதகங்களேதுமில்லை யஞ்சவேண்டாம்
பகரரியபெரியோர்க ளுதவியாவார்

மேதகஞ்சேர்தனலாபம் பெருகிவாழ்வாய்
மேன்மைமிகுமுத்யோகங் கிடைக்குமப்பா
பூதலமீதெத்தொழிலை நீசெய்தாலும்
புண்ணியனேபலனுண்டா மறிந்துகொள்ளே.

(வ-ம்) நீ நினைத்தகாரிய மொரு பெரியமனிதனாலுதவியாகும். மேன்மையுள்ள உத்யோகங்கிடைக்கும். வியாபாரம் விர்த்தியாகும். தனலாபங் கிடைக்கும். வீட்டுக்காரிய மனுகூலமாகும். (16)

211-உகக-வது.

இருநூற்றுப்பதினொன்று மிலக்கந்தன்னை
யின்பமுடன்தொட்டதற்குக் காரணங்கேள்
கருதுமுந்தன்காரியங்க ளனுகூலங்காண்
கவலையில்லைபுத்திரரைப் பெற்றுவாழ்வாய்
மருவிவாழுமூரைவிட்டுப் புறவூர்செல்ல
மனதில்நினைத்திருக்கின்றாய் போகவேண்டாம்
அருள்தேவபூசையதைச் செய்வாய்நாற்பத்
தைந்துநாட்சென்றதின்பின் பலனுண்டாமே.

(வ-ம்) நீ நினைத்தகாரியங் கைகூடும். குடும்பவிர்த்தியாகும். புத்திரலாபமுண்டு. ஆனால் நீ வெளியூருக்குப்போக எண்ணங்கொண்டிருக்கின்றாய், நீ போகக்கூடாது. ஏனென்றால் நீ உன்னிஷ்டதேவதைக்குப் பூசைசெய்யவேண்டியது அதினால் இன்னம் நாற்பத்தைந்துநாட்சென்று லனுகூலம். (17)

212-உகஉ-வது.

தொட்டதோரிருநூற்றுப் பன்னிரண்டாந்
துணையுதவும்நற்பலனைச் சொல்லக்கேளாய்
கட்டமெலாமின்றுடனே விலகிப்போகுங்
கவலையில்லையுன்குடும்பம் விர்த்தியாகும்

மட்டறவுன்வீட்டுக்கா ரியங்கைகூடும்
மகிபனேஜென்மத்தில் ராகுவென்போர்
திட்டமுடனிருக்கின்று ரின்னமெட்டுத்
தினஞ்சென்றால்விலகிடுவா ரறிந்துகொள்ளே.

(வ-ம்) மனக்கவலை நீங்கும், தனலாபங்கிடைக்கும், குடும்பவிர்த்தியாகும், வீட்டுக்காரியஞ் செயமாகும், உன்னுடைய ஜென்மத்தில் ராகுவிருக்கின்றதினாலே இன்ன மெட்டுதினத்தில் விலகுவார் ஜெயம். (18)

213-உகங-வது.

இன்பமுடனிருநூற்றுப் பதின்மூன்றென்னு
மெண்ணதைநீதொட்டதற்குக் காரணங்கேள்
பின்புனக்குலாபமுண்டாம் முன்பாம்நஷ்டம்
பேருலகிலுனக்கெதிரி யொருவனுண்டு
தன்மையென்றுநீயவனை நம்பவேண்டாந்
தப்பியதோர்பொருள்வந்து சேருமுன்கை
அன்பனேபுறவூரி விருந்துலாப
மகப்படுங்காண்சுகப்படுவா யறிந்துகொள்ளே.

(வ-ம்) நீ தொட்டகுறியால் லாபங்கிடைக்கும், கைவிட்டுப் போனபொருள் வந்துசேரும், வெளியூரிலிருந்து லாபங் கிடைக்கும், ஆனாலுனக்கு யெதிரியொருவனுண்டு அவனை நம்பவேண்டாம், நீயுந் தைரியம் விடவேண்டாம், உனக்கு முன்னாடி யொருபொருள் நஷ்டமாகும், பின்பு லாபமுண்டாகும். (19)

214-உகச-வது.

இருநூற்றுப்பதினான்கா மிலக்கந்தன்னை
யியல்புடன்நீதொட்டதற்குக் காரணங்கேள்
ஒருவருடம்நீமிகவும் வருத்தப்பட்டா
யுத்தமனேயினிமேலும் வருந்தவேண்டாம்

பொருமின்னமேழுநாட் சென்றலிந்தப்
பூவுலகிலீராண்டு குறைவராது.
தருமர்தனக்கிளையசகா தேவன்வாக்கைத்
தண்டமிழால்யானுரைத்தேன் நம்புவாயே.

(வ-ம்) நீ தொட்டலக்க மென்னவென்றால், நீ மிகவும் ஒரு வருஷகாலம் வருத்தப்பட்டாய் அந்த வருத்தம் நீங்கிவிட்டது. இப்போதிந்த லக்கத்தைத் தொட்டநாள் தொடங்கி யின்ன மேழுநாள் கழிந்தால் இரண்டுவருஷம் வரைக்கும் குறைக ளில்லாமலிருப்பாய் நீ முன்செய்த தொழிலைவிட்டு நீங்கியி ருக்கின்றாய், அந்தத்தொழிலைச் செய்யவும் நன்மை. (20)

221-உஉக-வது.

ஆவலுடனிருநூற்றி யிருபத்தொன்றை
யப்பனேதொட்டதற்கு மார்க்கங்கேளாய்
பாவனையாய்நீநினைத்த காரியங்கள்
பங்கமுறும்முடியாது நிலைபெறாது
காவலனேசெய்தொழிலும் நஷ்டமாகுங்
கனிவானசினேகிதனாற் பகையுண்டாகும்
பூவகத்திலொருமாதஞ் சென்றாலப்பா
பொல்லாங்கெலாமகன்று சுகமுண்டாமே.

(வ-ம்) நீ நினைத்தகாரியங் கைகூடாது, யெந்தவேலை செய் தாலும் பலியாது, ஒருவர்சொல்லைக் கேழ்க்கவேண்டாம், சினேகிதவாஞ்சையினாலே சண்டையுண்டாகும், ஆனால் நீ தொட்டநாள் தொடங்கி முப்பதுநாள் சென்றால் பலிக்கும், மத்திபம். (21)

222-உஉஉ-வது.

சதமிரண்டோடிருபத்தி ரண்டாமெண்ணைத்
தன்மையுடன்தொட்டதற்கு ஞாயங்கேளாய்

விதவிதமாயெத்தொழிலை நீசெய்தாலும்
வீணுமபாயமுண்டாங் கவலைநேரும்
இதமாயுன்னிடத்தினிலோர் கெட்டவெண்ண
மிருக்கின்றதனைநீக்கி லனுகூலங்காண்
பதவிபெற்றசகாதேவன் சொன்னவாக்கைப்
பாடினேன்றமிழாக நம்புவாயே.

(வ-ம்) நீ எந்தவேலைசெய்தாலுங் கைகூடாது, அபாயம் வரும், உன்மனதிலொரு கெட்டவெண்ண மிருக்கின்றது. அந்த வெண்ணத்தை நீக்கிவிட்டால் சுகமுண்டாம். (22)

223-உஉங-வது.

இருசதமோடிருபத்து மூன்றுமெண்ணை
யின்பமுடன்தொட்டதற்கு நன்மைகேளாய்
கருதியவுன்காரியங்க ளனுகூலங்காண்
கவலையில்லைஜெயகால மிதுவேயாகும்
கிருதார்த்தனுவாய்நீ யுன்றனக்குக்
கிரகமெலாம்நன்றாக விருக்குதப்பா
பெருமையுயர்சகாதேவன் சொன்னவாக்கைப்
பேசினேன்றமிழாக நம்புவாயே.

(வ-ம்) நீ நினைத்தகாரியஞ்செயமாகும், உன்னுடையகிரகங்களெல்லாம் நன்றாகவிருக்கின்றது, தனலாபங்கிடைக்கும், குறைவில்லை உத்தமம். (23)

224-உஉச-வது.

இருசதமோடிரண்டுதசத் தொருநான்கான
எண்ணதனைத்தொட்டதற்குக் காரணங்கேள்
பெருகிவரும்நீமுயற்சி செய்தவேலை
பிசகாமல்முடியுமப்பா கவலையில்லை

அருமையுடனொருவனுக்கிங் குதவிசெய்ய
வாலோசித்திருக்கின்ற யோசித்துச்செய்
பெருமையுயர்சகாதேவ னுரைத்தவாக்கைப்
பேசினேன்பொய்யென்போர் நரகஞ்சார்வார்.

(வ-ம்) அட்டியில்லாமல் நீயெடுத்தவேலைமுடியும், ஆனல் நீ யொருவருக்குதவிசெய்ய வெத்தனித்திருக்கின்றாய், யோசித்துச்செய்வாயாக உத்தமம். (24)

231-உ௩௧-வது.

வேண்டியேயிருநூற்று முப்பத்தொன்றை
வித்தகனேதொட்டதற்கோ ருத்தமங்கேள்
நீண்டிடுமிப்புவியினிலோர் காரியம்நீ
நினைத்திருக்கிறாய்முடியுஞ் சொற்பநாளில்
தாண்டிவரும்பகைவர்களும் விலகிநிற்பார்
சஞ்சலங்களில்லையப்பா பயப்படாதே
காண்டீபன்றம்பிசகா தேவனூலைக்
கண்டெடுத்துயான்றமிழா லுரைத்தேன்பாரே.

(வ-ம்) நீ நினைத்தகாரியஞ் செயமாகும், நீ யொருகாரியம் நினைத்திருக்கின்றாய். அந்தக்காரிய மின்னங் கொஞ்சநாளில் கைகூடும் பயப்படாதே உத்தமம். (25)

232-உ௩உ-வது.

நலங்கொளிருநூற்றுமுப்பத் திரண்டதான
லக்கமதைத்தொட்டதற்குக் காரணங்கேள்
கலங்கமில்லைத்தனலாபங் கிடைக்குமப்பா
கதித்திடுமுன்கிரகமெலாம் நல்லவீட்டில்
துலங்கிடவிங்கிருப்பதினல் செயமேயாகுஞ்
சுகமுடனேவாழ்வதற்கோ ரையமில்லை

தலங்களெங்கும்புகழ்படைத்த பாண்டவற்குச்
ச்காதேவன்சொல்லியநல் வாக்காம்நோக்கே.

(வ-ம்) உன்மனவருத்தம் நீங்கிவிட்டது. இதுவோ ஜெய காலமாகும், உன்கிரகங்கள் நல்லவீட்டி லிருக்கின்றார்கள். தனலாபங் கிடைக்கும். உபாயமாய் வரவும். (26)

233-உஙங-வது.

நத்தியிருநூற்றமுப் பத்துமூன்றும்
லக்கமதைத்தொட்டதற்கு ஞாயங்கேளாய்
புத்திமிகுசினேகனுனைப் பிரிந்ததாலும்
புறவூரினால்நேர்ந்த கவலையாலும்
மத்திலகப்பட்டதொரு தயிரைப்போலே
வாடுகின்றாயன்றியொரு துஷ்டனோடு
நித்தியமுந்திரிகின்ற யவனைவிட்டு
நீங்கினாற்பலனுண்டா மறிந்துகொள்ளே.

(வ-ம்) நீ நல்ல சினேகனைப்பிரிந்த விசனத்தினாலேயும், வெளியூரினால்நேர்ந்த கவலையினாலும், நீ மிகவும் வருத்தப்படு கின்றாய். அல்லாமலும், இப்போது ஒருவனைச் சினேகம் பிடித்திருக்கின்றாய், அவனுனக்கு வயிரியா யிருக்கின்றான். அந்தச் சினேகத்தைவிட்டு நீங்கினால் சுகமடைவாய். (27)

234-உஙச-வது.

சொல்லுமிருநூற்றமுப் பத்துநான்காந்
தொகையதைநீதொட்டதற்குக் காரணங்கேள்
நல்லுதவியுண்டாமோர் சினேகனாலே
ஞாலமதிற்பகைவர்களை நாசஞ்செய்வாய்
புல்லுமிருபக்கமதி லிருந்துனக்குப்
பொருள்வந்துசேருமப்பா கலங்கவேண்டாம்

வெல்லுமிந்தச்சாஸ்திரத்தை நம்புவோர்கள்
மேலானபுகழுடைவார் நம்புவாயே.

(வ-ம்) உனக்கு யிரண்டு திசையிலிருந்து பொருள்வந்து சேரும். நல்லசினேகித ருறவாவார்கள். அதினாலுன் மனக் கவலைதீரும், உன்சத்துருக்கள் நாசமாவார்கள். (28)

241-உசக-வது.

துங்கமுடனிருநூற்று நாற்பத்தொன்றுந்
துகையதைநீதொட்டதற்குக் காரணங்கேள்
மங்களகல்யாணத்தின் விசனமொன்று
வாஞ்சையுள்ளசினேகிதனால் விசனமொன்று
சங்கடஞ்செய்வெளியூரின் விசனமொன்று
தானிருக்குதுன்வீட்டைக் கெடுக்கவென்றே
பொங்கமுடனொருவனுந்தன் வீட்டினுள்ளே
புகுந்துவுறவாடிவரு கின்றான்நீக்கே.

(வ-ம்) உனக்கு விவாகத்தின் விசனமொன்றும், வெளியூ ரின் விசனமொன்றும், ஒரு சினேகிதனாலுண்டான விசன மொன்றும் இருக்கின்றதுந்தவிர உன்வீட்டைக் கெடுக்கவெ ன்று ஒருவன் கெட்டயெண்ணங்கொண் டுன்வீட்டிற்கலந்து உறவாடிவருகின்றான், அவனை நீக்கில் பலனுண்டாம். (29)

242-உசஉ-வது.

பேசுமிருநூற்றுநாற் பத்திரண்டை
பிரியமுடன்தொட்டதற்குக் காரணங்கேள்
மாசொன்றுமில்லையப்பா ஜெயமுண்டாகும்
மனவருத்தமென்பதின்றோ டகன்றேபோகுங்
காசலையாயுன்வீட்டி லிருந்துநீயுங்
கருதியதோர்காரியமு முடிவேயாகும்

நேசனேமற்றின்னமொரு வரைவைத்தன்பாய்
நீநினைத்தகாரியத்தை யோசிப்பாயே.

(வ-ம்) மனக்கவலைதீரும். நீ வீட்டிலிருந்து யோசித்தகாரியஞ் செயமாகும் தவிர இன்னமொருவரைக்கொண்டு செவ்வையாக ஆலோசனை செய்வாயாக. (30)

243-உசங-வது.

நாடியிருநூற்றுநாற் பத்துமூன்றும்
லக்கமதைத்தொட்டதற்குக் காரணங்கேள்
கூடிவருமெத்தொழிலை நீசெய்தாலுங்
குறைவில்லைத்தேகவா ரோக்யமுண்டாம்
நீடுபுகழுத்யோகங் கிடைக்குமப்பா
நினைத்திடுமுன்காரியங்க ளனுகூலங்காண்
பாடினேம்புத்திரசம் பத்துண்டாகும்
பாண்டவர்க்குச்சகாதேவன் னூலைநம்பே.

(வ-ம்) நீ தொட்டலக்கப்பலன் புத்திரபாக்யமுண்டாகும். உத்தியோகங்கிடைக்கும். தனலாபமுண்டாகும். எந்தவேலை செய்தாலுஞ் செயமாகும். தைரியம் விடவேண்டாம். நம்பு உத்தமம். (31)

244-உசச-வது.

படியிலிருநூற்றுநாற் பத்துநான்கைப்
பார்த்திபனேதொட்டதற்கு நேத்தியைக்கேள்
முடியுமுன்தன்மனம்போல்நீ கொண்டவெண்ணம்
முக்கியமாய்ச்சிநேகிதனை நம்பவேண்டாம்
மிடிகளொன்றுமில்லையப்பா பயப்படாதே
மேதினியிற்செல்வமிகப் பெருகிவாழ்வாய்
துடியாய்நீயெத்தொழிலைச் செய்திட்டாலுஞ்
சுகமுண்டாந்தொழில்விர்த்தி யாகும்பாரே.

(வ-ம்) நீ தொட்டலக்கத்தின்பலன், உன்தேகபீடை நீங்கிப்போய்விட்டது. உனக்குக் கிரகங்கள் நல்லதாகவிருக்கின்றது. நீ யொருவனையும் நம்பவேண்டாம். இப்போதொருவனை நம்பியிருக்கின்றாய். அவன் கெட்டயெண்ணங்கொண்டிருக்கிறான். உன்மனம்போ லெந்தக்காரியமுஞ் செய்தால் பலிதமாகும். (32)

311-௩௧௧-வது.

பதிவதனின்மூன்றுநூற்றுப் பதினொன்றாமிலக்கந்தொட்டாய்
நிதியின்மீதாசையாலும் நிலைமைசேர்வெளியூராலே
உதித்திடுங்கவலையாலு முழல்கின்றாய்தேவிதன்னைத்
துதித்துநீபூசைசெய்தால் சுகமுண்டாமறிந்துகொள்ளே.

(வ-ம்) உனக்குப் பணத்தின்மேலிச்சையும், புறவூரினாலே நேர்ந்த கவலையுமிருக்கின்றது. அதுகளெல்லா மனுகூலமாவதற்கு உன் குலதேவதைக்குப் பூசைசெய்வாயாக. (33)

312-௩௧௨-வது.

முன்னூற்றுப்பன்னிரண்டா மிலக்கந்தன்னை
முக்கியமாய்த்தொட்டதற்குக் காரணங்கேள்
மின்னுமெழிற்பொருள்சேருங் குறைகளில்லை
வித்தகனேயுன்குடும்பம் விர்த்தியாகும்
பொன்னூருமுன்றேகப் பிணிகள்நீங்கும்
புத்திரரைப்பெற்றுலகில் வாழ்வாயப்பா
இன்னூலைநம்புமவர் புகழ்பெற்றுய்வா
ரிகழுமவர்நரகடைவா ரறிந்துகொள்ளே.

(வ-ம்) நீ தொட்டலக்கத்தின் பலன்யாதெனில் உன்மனக் கவலைநீங்கும், வியாதிதீரும், தனலாபங்கிடைக்கும், புத்திரபாக்கியமுண்டாகும், உன்குடும்பம் விர்த்தியாகும், நீ யென்ன தொழில்செய்தாலும் பலிக்கும் உத்தமம். (34)

313-௩௧௩-வது.

சதிருடனேமுன்னூற்றுப் பதின்மூன்றுமெண்
தன்மையுடன்தொட்டதற்கோருண்மைகேளாய்
எதிரியுனக்கனேகருண்டு பயப்படாதே
யெத்தனைபேர்வந்தாலும் வெல்லாருன்னைக்
கதிதரும்நற்பணத்தின்மீ தாசைவைத்துக்
கவலையடைகின்றாயுன் தேவதைக்குப்
பதிமீதோர்மாதத்துக் கோர்நாள்நீயும்
பாங்குடனேபூசைசெய்யப் பலனுண்டாமே.

(வ-ம்) உனக்குப் பணத்தின்மீதாசையிருக்கின்றது. ஆகி லு மனுகூலமாக உனக்கு அனேக யெதிரிகளிருக்கின்றார்கள். எத்தனைபேர் வந்தபோதிலு முன்னைச் செயிக்கமாட்டார்கள் பயமில்லை லாபங்கிடைக்கும், உன்குலதேவதைக்கு மாதத்துக்கொருதடவை பூசைசெய்வாயாக. (35)

314-௩௧௪-வது.

தக்கபுகழ்முன்னூற்றுப் பதிநான்காமெண்
சற்குணனேதொட்டதற்கு நற்குணங்கேள்
திக்கனைத்துமகிழ்ந்திட விவாகங்கூடுந்
தீங்கில்லைநீநினைத்த காரியங்கள்
சிக்கறவேமுடியுமிதற் கையமில்லைச்
செல்வனேநீமகிழ்வாய்த் தருமஞ்செய்வாய்
மிக்கதனம்படைத்துய்வாய் சோமவார
விரதமதையனுசரித்து வருகுவாயே.

(வ-ம்) நீ நினைத்தகாரிய முடியும். கல்யாணங்கூடும். சம்பத்துடன் வாழ்வாய், ஆனதினாலே சோமவாரவிரதமிருந்து தருமஞ்செய்து வருவாயாக. (36)

321-௩௨௧-வது.

உரிமையுடன்முன்னூற்ருே டிருபத்தொன்றை
யுத்தமனேதொட்டதற்குக் காரணங்கேள்
விரிஞாலந்தனில்வருத்த மிகவுண்டாகும்
மெய்சோரும்பிணியினுல் வாடிநைவாய்
அரிதானதொழில்களெதை நீசெய்தாலு
மப்பனேபொருள்விரய மாகுமுண்மை
தெரியிதற்பின்னிருபத்தி யொன்ருமாதஞ்
ஜெயகாலமாகுமெனக் கண்டுகொள்ளே.

(வ-ம்) நீ தொட்டலக்கத்தின் பலன் மனவருத்தமுண்டாகும். தேகம் பிணியினுலே சோர்வடைந்து நைவாய். துணிவாக நீ யென்னதொழில்செய்தாலும் நஷ்டமாகும், பொருள் விரயப்படும். ஆனுலுமிதற்கு பின் யிருபத்தியொன்ருமாதம் உன்காரியஞ் சித்தியாகும் அறிவாயாக. (37)

322-௩௨௨-வது.

மேவிடுமுன்னூற்றுயிரு பத்திரண்டை
விற்பனனேதொட்டதற்கு நற்பயன்கேள்
பூவினுந்தன்மனக்கவலை நீங்குமப்பா
போனதொருதொழில்வந்து சேருமுன்கை
ஆவியொற்றதமயனெடு தம்பியாலே
யனுகூலமாகுமுந்தன் காரியங்கள்
மாவிஜயன்றம்பிசகா தேவன்சொன்ன
வாக்கைவிரித்தேன்றமிழால் நம்புவாயே.

(வ-ம்) நீ நினைத்தகாரியம் உந்தன் அண்ணன் தம்பிமார்களாலே முடியும். உன்மனதில் கவலைநீங்கும். உன்னைவிட்டு நீங்கியதொழில் இந்தவருஷத்தில் உனக்குக்கிடைக்கும் உத்தமம். (38)

323-௩௨௩-வது.

நயஞ்சூழ்முன்னூற்றி யிருபத்துமூன்றும்
  லக்கமதைத்தொட்டதற்குக் காரணங்கேள்
பயமில்லைச்சந்தேகங் கொள்ளவேண்டாம்
  பகைவருனைக்கண்டொடுங்கி விலகிநிற்பார்
மயங்காதேவெளியூரி லிருந்துலாபம்
  வந்துன்கைசேருமிதற் கையமில்லை.
இயல்பாயிக்குறிப்பதனை யறிவதற்குன்
  னிடதுகண்மேல்மச்சமுண்டாமறிந்துகொள்ளே

(வ-ம்) நீ சந்தேகப்படவேண்டா மெதிரியை வெல்வாய், மனக்கவலை நீங்கும், அயலூரிலிருந்துனக்கு லாபங்கிடைக்கு மிதற்குசாக்ஷி யுன்னிடது கண்ணின்மேலே மச்சமிருக்கு மறிந்துகொள்வாயாக.

324-௩௨௪-வது.

சீர்பெறுமுன்னூற்றி யிருபத்துநான்கைச்
  செல்வனேநீதொட்டதற்குக் காரணங்கேள்
ஏர்பெருகுமுலகமதில் நீநினைத்த
  வெண்ணம்போல்முடியுமுந்தன் காரியங்கள்
போர்கெலித்துவந்திடுவாய்ப் பயப்படாதே
  புண்ணியனேயொருவரையும்பகைக்கவேண்டாம்
பேர்பரவத்தருமமதை விர்த்திபண்ணு
  பிரபலமாமுனக்கென்றுங் குறைவராதே.

(வ-ம்) நீ நினைத்தகாரிய முடியும், சண்டைகெலித்து வருவாய், தருமத்தை விர்த்திசெய்து வருவாயாகில் உனக்கொருநாளுங் குறைவராதறிவாயாக.

331-௩௩௧-வது.

கலங்கமிலாமலுந்தன் காரியம்விர்த்தியாகும்
வில்குருதுனதுசெல்வம் விர்த்தியாமுன்குடும்பம்
பலமுடனேயுன்பெண்டீர் பண்ணினதருமஞ்சேரும்
உலகின்முன்னூற்றுமுப்பத் தொன்றைநீதொட்டதற்கே.

(வ-ம்) நீ நினைத்தகாரியஞ் செயமாகும், லாபங்கிடைக்கும் உன்குடும்பம் விர்த்தியாகும், உன் பெண்சாதியானவள் செய்துவருகின்ற தர்மப்பலனுன்னைச் சேரும், எந்தக்காரியமுஞ் சித்தியாகு மறிவாயாக சுபம். (41)

332-௩௩௨-வது.

நேரிடுங்கவலையப்பா நெஞ்சினில்நீநினைத்த
காரியங்கைகூடாது கவலையுற்றாயீராண்டு [நஷ்டம்
பாரிலெத்தொழில்செய்தாலும் பலித்திடாதடைவாய்
ஏரில்முன்னூற்றிமுப்பத் திரண்டைநீதொட்டதற்கே.

(வ-ம்) நீ தொட்டலக்கத்தின் பலன் கவலையுண்டாகும், நீ நினைத்தகாரிய முடியாது, நீ யெந்தத்தொழில் செய்தாலும் நஷ்டமுண்டாகும், நீ யிரண்டுவருஷகாலமாக மிகவுந் துன்பப்பட்டாய், உன்சிநேகிதனே யுனக்கு வயிரியாகவிருக்கின்றான் மத்திமம். (42)

333-௩௩௩-வது.

நவமிகுமுன்னூற்றுமுப் பத்துமூன்றை
நண்பனேதொட்டதற்கு ஞாயங்கேளாய்
அவனிதனில்நீநினைத்த காரியங்க
ளனுகூலமாகுமப்பா சிநேகஞ்சேரும்
பவமறவேபுத்திரரைப் பெற்றுவாழ்வாய்
பண்ணுகின்றதொழிலதனி லாபமுண்டாம்
தவறுமலுனதுகுல தேவதைக்குச்
சற்குணனேபூசைசெய்யப் பலனுண்டாமே.

(வ-ம்) நீ நினைத்தகாரியங்கள் கைகூடும். நல்ல சிநேக ர்களுறவாவார்கள். புத்திரரைப்பெற்று வாழ்வாய். நீ செய்யுந் தொழிலில் லாபங்கிடைக்கும். ஆனதினாலே யுன் குலதேவ தைக்குப் பூசைசெய்தால் பலன்கிடைக்கும் சுபம். (43)

334-௩௩௪-வது.

நன்றாய்முன்னூற்றுமுப் பத்துநான்காம்
லக்கமதைத்தொட்டதற்குப் பலனைக்கேளாய்
குன்றாமல்நீநினைத்த காரியங்கை
கூடுமிதற்கையமில்லை லாபமுண்டாம்
மன்றாருஞ்சிநேகிதனா லுதவியாரும்
மகிபனேபோனபொருள் வந்துசேரும்
பொன்றாதவரம்படைத்த பாண்டவற்குட்
புகழ்சகாதேவனருள் நூலைநம்பே.

(வ-ம்) உன் கைவிட்டுப்போனபொருள் வந்துசேரும். நீ நினைத்தகாரிய முடிவாகும். லாபங்கிடைக்கும். ஒரு சிநேக னா லுதவியுண்டாகும். பலயோசனை வேண்டாம். (44)

341-௩௪௧-வது.

அகமதிற்கவலையுண்டா மப்பனேபித்தவாய்வு
தகமைசேர்தேகந்தன்னிற் றங்கியேயிருக்குதிந்தச்
செகமதிற்சிவன்றாள்போற்று செழித்திடும்புத்திரபாக்கியம்
உகந்துமுன்னூற்றிநாற்பத் தொன்றைநீதொட்டதற்கே.

(வ-ம்) உன்மனதிற் கவலையுண்டாகும். உன்தேகத்தில் பித்தவாய்வு தங்கியிருக்கின்றது. ஆனதினாலே நீ சிவபிரானை ப்பூசித்தால் பலனுண்டாகும் அறிவாயாக. (45)

342-௩௪௨-வது.

தனிபெறுபொருளுஞ்சேரும் நாடியகவலைநீங்கும்
தனிமையாய்மேற்குத்திக்கு தனிலிருந்துண்டாம்லாபம்

கனிவுடனிரண்டுமாதங் கழிந்திடிற்சுகமுண்டாகும்
இனியமுன்னூற்றுநாற்பத்திரண்டைநீதொட்டதற்கே.

(வ-ம்) நீ தொட்டலக்கத்தின் பலனாவது நினைத்தகாரியஞ் சித்தியாகும். மேற்குத்திசையிலிருந்து லாபம்வரும். கஷ்டந்தீரும். இன்னமிரண்டுமாதஞ்சென்று லதிக சுகமுண்டாகும். அறிவாயாக சுபம். (46)

343-ஙசங-வது.

நானிலந்தனில்முன்னூற்று நாற்பத்துமூன்றைத்தொட்டாய்
தேனிலைமாலைமார்பா சினத்திலுன்கைவிட்டன்றே
தானிதகன்றுபோன தகுபொருள்வந்துசேரும்
கானிறையைந்துமாதங் கழிந்திடிற்சுகமுண்டாமே.

(வ-ம்) மனவருத்தத்தினாலே யுன்கைவிட்டுப்போனபொருள் வந்துசேரும். நீ நெடுநாளாகத்துன்பமடைந்தாய். இன்னமைந்துமாதஞ்சென்று னுனக்குச் சுகமுண்டாகும். (47)

344-ஙசச-வது.

நண்ணியேநீமுன்னூற்று நாற்பத்துநான்கைத்தொட்டாய்
எண்ணியவெண்ணங்கூடு மிசைதொழில்விர்த்தியாகும்
மண்ணினில்பிரிந்தநேசன் மறுபடிவந்துசேர்வான்
பெண்ணினாலுதவியாகும் பீடையும்நீங்கும்பாரே.

(வ-ம்) நீ எந்தவேலைசெய்தாலும் லாபங்கிடைக்கும். உன் தேகபீடைகள் நீங்கும். நீயொரு சினேகிதனைப் பிரிந்திருக்கின்றாய். அவன் மறுபடியு மிஷ்டமாவான், உனக்கொரு பெண்ணா லுதவியுண்டாகும். உன்பகைவர்கள் நாசமடைவார். நீ யொருவரையும் நிஷ்டூரஞ்செய்துகொள்ளாதே உத்தமம். ()

411-சகக-வது.

பாங்குடன்நானூற்றுப் பதினொன்றைத்தொட்டதற்குத்
தாங்கொணாக்கவலையுண்டாந் தரையிலுன்காரியங்கள்

ங்குறும்பகைகள்நேருஞ் சினேகனுல்தோஷமாகும்
ங்குதேவதையைப்போற்றி லுனக்குநற்பலனுண்டாமே.

(வ-ம்) நீ நினைத்தகாரியங் கைகூடாது. ஆசை நிராசை
ாகும். ஒருசினேகனு லபாயமுண்டாகும். அவனை நம்ப
வண்டாம் உன்தேவதைக்குப் பூசைசெய்ய நாளுக்குநாள்
க்ஷேமமடைவாய் மத்திமம். (49)

412-சகஉ-வது.

பத்தியாய்நாானூற்றுப் பன்னிரண்டெண்ணைத்தொட்டாய்
புத்திரலாபமுண்டாம் பூவிலோர்பெண்ணின்மீது
நித்தியமாசைவைத்து நீபடுகின்றாய்துன்பம்
நத்தியேயின்னஞ்சொற்ப நாளினில்முடியும்பாரே.

(வ-ம்) நீ நினைத்தகாரியங் கைகூடும். ஒரு பெண்சம்பந்தத்
தைப்பற்றி நீ வருத்தப்படுகிறாய். இன்னங் கொஞ்சதினத்திற்
குள் சித்தியாகும். தேவதைக்குப் பூசைசெய்வாயாக. (50)

413-சகாா-வது.

மாசறும்பணத்திலாசை வைத்துநீவாடுகின்றாய்
தேசமீதந்தத்துன்பந் தீருமோர்மங்கையாலே. [ம்
நேசனேவெளியூராலே நிலைத்திடுந்தொழில்கிடைக்கு
பாசமதாய்நானூற்றுப்பதின்மூன்றைத்தொட்டதற்கே

(வ-ம்) நீ தொட்டலக்கத்தின்விபரங்கேள் உனக்குப்பணத்
தின் விசனமொன்றிருக்கின்றது, அது ஒருபெண்ணினால்முடி
யும், அடுத்தவூரிலிருக்கு மொரு பெரியமனித னுதவியினு லு
னக்கு வேலைகிடைக்கும் உத்தமம். (51)

414-சகச-வது.

மிகவும்நீவருத்தமுற்றாய் விலகிவிட்டதுகாண்துன்பம்
அகமதில்நினைத்திருக்கு மரியவுன்காரியங்கள்

புகலுமோர்மாதஞ்சென்றால் புண்யனேவிர்த்தியாகு
பகாருஞ்சீர்நானூற்றுப் பதினான்கைத்தொட்டதற்கே.

(வ-ம்) நீ மிகவும் வருத்தப்பட்டாய் அந்தவருத்தம் நீங்கி
விட்டது. நீயுன் மனதிலொரு யெண்ணங் கொண்டிருக்கின்
றாய், அந்தக்காரிய மின்னமொரு மாதங் கழிந்துவிட்டால்
அநுகூலமாகும், உன் குலதேவதைக்குப் பூசைசெய்வாயாக.

421-சஉக-வது.

சாற்றருஞ்சீர்நானூற்றே டிருபத்தொன்றை
சற்குணனேதொட்டதற்குக் காரணங்கேள்
ஆற்றலுடன்வெளியூரி னுதவிசேரு
மப்பனேபுத்திரனைப் பெற்றுவாழ்வாய்
தோற்றதொருபொருளையெண்ணி யெண்ணிநித்தந்
துயரடைகின்றாயெளிதில் வந்துசேரும்
மாற்றலர்க்குச்சிங்கேறு விஜயன்றம்பி
வாய்ந்தபுகழ்ச்சகாதேவன் வாக்கைநம்பே.

(வ-ம்) நீ தொட்டலக்கத்தின் பலனுவது வெளியூரினுதவி
யுண்டாகும், கைவிட்டுப்போனபொருளை நினைத்து நீ துக்கப்
படுகிறா யதுகைகூடும், புத்திரலாபங்கிடைக்கும், விசனப்பட
வேண்டாம். (53)

422-சஉஉ-வது.

அரிதாநானூற்றிருபத் திரண்டாமெண்ணை
யப்பனேதொட்டதற்குக் காரணங்கேள்
விரிஞாலந்தனில்மூன்று வருஷமாக
வித்தகனேநீமிகவும் வருத்தமுற்றாய்
தெரிவாய்நீயினியந்தக் கவலையெல்லாந்
தீர்ந்துசுகமாகவேதான் வாழ்வாயுண்மை

உரியதாம்புத்திரபாக் கியமுண்டாகு
முனதுகுல்தேவதைக்குப் பூசைசெய்யே.

(வ-ம்) நீ மூன்றுவருஷகாலமாய் வருத்தமுற்றாய், அந்த வருத்தம் நீங்கிவிட்டது. எந்தவேலை செய்தாலும் பலிக்கும். விசாரித்துச்செய், புத்திரலாபமுண்டு, உன்குல்தேவதைக்குப் பூசைசெய்வாயாக. (54)

423-சஉங-வது.

மகிழ்ந்துநானூற்றியிரு பத்துமூன்றை
மன்னவனேதொட்டதற்குக் காரணங்கேள்
அகிலமதிலெத்தொழிலை நீசெய்தாலு
மதிகலாபங்கிடைக்கும் பயப்படாதே
விகிதமுடனேமனதில் நினைத்தவெண்ணம்
விலகுறாதனுகூல மாகுமுண்மை
மகிமைபெறுஞ்சகாதேவன் நூலையாய்ந்து
வண்டமிழினுலுணர்த்தேன் நம்புவாயே.

(வ-ம்) நீ நினைத்தகாரிய முடியும், எந்தத்தொழில் செய்தாலு மதிகலாபங்கிடைக்கும் பயப்படவேண்டாம். (55)

424-சஉச-வது.

முயன்றுநானூற்றியிரு பத்துநான்கை
முக்கியமாய்த்தொட்டதற்கு விபரங்கேளாய்
வயங்குமுந்தன்வீட்டினிலுஞ் சுகமேயில்லை
மனக்கவலையாய்மிகவும் வாடுகின்றாய்
நயந்துலகில்நீயெடுத்த வேலையெல்லாம்
நஷ்டமாய்முடிந்ததினிச் சுகம்பெற்றாய்வாய்
கயந்தனைவந்தருண்டபிரா னுபயபொற்றாள்
கருதுசகாதேவனருள் நூலைநம்பே.

(வ-ம்) நீ மிகவும் வருத்தப்படுகிறாய், நீ யெடுத்தவேலை யெல்லாம் நஷ்டமாகிவிட்டது. உன்வீட்டிலுஞ் சுகமில்லை யாதலினிமேற் சுகமடைவாய் பயம்வேண்டாம். (56)

431-சஙக-வது.

வந்துறவாடுவோர்கள் மகிழ்வொடுதமயன்றம்பி
தந்துடன்நீநினைத்த சங்கதிமுடிவேயாகுஞ்
சிந்துசூழுலகின்மீது தீருமுன்கவலையாவும்
உந்துநானூற்றிமுப்பத் தொன்றைநீதொட்டதற்கே.

(வ-ம்) நீ நினைத்தகாரியஞ் சித்தியாகும். உன் மனக்கவலை நீங்கும், பகையாயிருந்த அண்ணன்தம்பியர்களுறவாவார்கள். உன்கிரகமெல்லாம் நல்லதாகவிருக்கின்றது, சந்தேகப்படவேண்டாம் அறிவாயாக உத்தமம். (57)

432-சஙஉ-வது.

அகத்தினில்நினைத்தவேலை யப்பனேமுடிவேயாகுந்
தகத்துடன்புறவூர்க்கேகத் தான்நினைத்திருக்கின்றாய்சொல்
உகத்ததோரண்ணன்றம்பி யுடன்பகைத்தேவாழ்கின்றாய்
இகத்தின்நானூற்றுமுப்பத் திரண்டைநீதொட்டதற்கே.

(வ-ம்) உன்மனதில் நினைத்தகாரிய முடிவாகும். நீ வெளியூர்போக யோசித்திருக்கின்றாய், தடையின்றி போகலாகும். நீ அண்ணன்தம்பியர்களுடன் பகைத்து வாழ்ந்துவருகின்றாய், நீ யொருவரையும் நம்பவேண்டாம் உத்தமம். (58)

433-சஙந-வது.

மன்னியநானூற்றுமுப் பத்துமூன்றை
மகிபனேதொட்டதற்குக் காரணங்கேள்
நன்னிலைசேருன்வீட்டுக் காரியங்கள்
ஞாலமதில்முடியுமொரு சினேகனாலே

ன்னியனேசெய்தொழிலும் விர்த்தியாகுங்
கலங்காதேபுத்திரரைப் பெற்றுவாழ்வாய்
தன்னிலைமையறிந்தசகா தேவன்வாக்கை
சவிஸ்தாரமாயுரைத்தேன் றமிழால்நம்பே.

(வ-ம்) நீ தொட்டலக்கத்தின் பலனாவது வியாபாரம் விர்த்
யாகும், தனலாபங்கிடைக்கும், நல்லசினேகராலே யுன்வீட்
காரியங்க ளனுகூலமாகும், புத்திரபாக்கிய முண்டாகும்,
யப்படாதே யுத்தமம். (59)

434-சருச-வது.

மிகுபுகழ்நானூற்றுமுப் பத்துநான்கை
விற்பனனேதொட்டதற்கு நற்பலன்கேள்
தகுபொருள்களுண்டாகும் பிணிகள்நீங்குந்
தனைமீதுசெய்தொழிலும் விர்த்தியாகும்
விகிதமறும்பகைவர்களு முறவாவார்கள்
வீட்டினிலுண்டாகியதோர் கவலைநீங்கும்
மகுடமுடியரசரெலாம் புகழ்கிரீடி
மகிழ்ந்துணைவன்சொல்லியநல் வாக்காம்பாரே.

(வ-ம்) நீ நினைத்தகாரியமுடியும், பொருளுண்டாகும், தே
கபிணிகள் நீங்கும் நீசெய்கின்றதொழிலும் விர்த்தியாகும்,
பகைவர்களுறவாவார்கள். உன் வீட்டிலுண்டாகிய கவலை
தீரும், ஆனதினாலே கடவுளை தியானிப்பாயாக வுத்தமம். (60)

441-சசக-வது.

இன்னிலந்தனில்நீகொண்ட வெண்ணமுங்கைகூடாது
தன்னிலைபெயர்ந்துபோன தகுபொருள்வந்துசேர
மன்னியவேழுமாதம் வருடம்ரெண்டேனுஞ்செல்லும்
உன்னிநானூற்றுநாற்பத்தொன்றைநீதொட்டதற்கே.

(வ-ம்) நீ நினைத்தகாரியங்கள் கைகூடாது மத்திமம், கிரகங்கள் கெட்டதாகவிருக்கின்றது, உன்கைவிட்டு ஒருபொ ருள் போயிருக்கின்றது, அந்தப்பொருள் ஏழுமாதத்துக்குள் ளாவது இரண்டுவருஷத்துக்குள்ளாவது வந்து சேரும் தைரியம்விடாதே. (6

442-௪௪௨-வது.

இசைந்துநானூற்றுநாற்பத்திரண்டைநீதொட்டதற்
நசிந்துநீயுழலுகின்றாய் நண்ணுவெம்பிணியினாலே
கசிந்துசெய்தருமத்தாலுன் கவலைகள்நீங்கிவாழ்வாய்
வசையறத்தேவதைக்கு மகிழ்வொடுபூசைசெய்யே.

(வ-ம்) நீ தேகவியாதியினாலே வாடுகின்றாயிருந்தபோதிலு ம் நீ செய்துவரும் தருமமுன்னைக் காப்பாற்றுமாகையினாலே யுன்குலதேவதைகளுக்கும், நவக்கிரகாதிகளுக்கும் பூசைசெய் துவருவாயாக உத்தமம். (62)

443-௪௪௩-வது.

திடமுடன்நானூற்றுநாற் பத்துமூன்றைச்
செல்வனேநீதொட்டதற்குக் காரணங்கேள்
அடவுடனேநீநினைத்த காரியங்க
ளனுகூலமாகுமவ்வா றாகிலுங்கேள்
துடருமுந்தன்கிரகங்கள் கெட்டதாகத்
தோற்றுவதினாற்பொருளும் நஷ்டமாகும்
இடர்களறுமோர்மாதங் கழிந்தாலப்பா
வென்றனுங்குறைகளில்லை யறிந்துகொள்ளே.

(வ-ம்) நீ நினைத்தகாரியம் பலிக்கும், பலித்தபோதிலும் பொருள் நஷ்டமாகும், கிரகங்கள் கெட்டதாக விருக்கின்றது யின்னமொரு மாதங்கழிந்தால் சுகமடைவாய் பயப்படாதே.()

444-௪௪௪-வது.

துணிந்துநானூற்றுநாற் பத்துநான்காந்
துகைதனைநீதொட்டதற்கு வகைசொல்லக்கேள்
அணியாரும்புவிதனிலேத் தொழில்செய்தாலு
மதிகலாபங்கிடைக்குங் கவலையில்லை
திணிசேரும்பந்துகளைக் கூடிவாழ்வாய்
சிந்தையிலோர்பயமிருப்ப தனைநீக்கு
பிணியகலுமுன்செய்த தொழிலைவிட்டுப்
பெயர்ந்திருக்கின்றாயதற்கு முயற்சிசெய்யே.

(வ-ம்) நீ நினைத்தகாரியஞ் சித்தியாகு மெந்தத்தொழில் செய்தாலும் அதிகலாபங்கிடைக்கும், கவலைப்படவேண்டாம், உன்பந்துக்களுடனே கூடிவாழ்வாய், ஆகிலுமுன்மனதிலொரு பயமிருக்கின்றது, அந்தப்பயத்தை நீக்கிவிடுவாயாக, முன்னாடி நீசெய்துவந்த தொழிலைவிட்டு நீங்கியிருக்கின்றாய், அந்தத்தொழிலுக்கு முயற்சிசெய்வாயாக வுத்தமம். (64)

தொடுகுறிசாஸ்திரம் முற்றிற்று.

சீதாசக்கரம்.

க	௪	௭
௨	௫	௮
௩	௬	௯

க-லாபம், ௪-பீடை, ௭-தனம்.
௨-நாசனம், ௫-க்ஷேமம், ௮-மரணம்.
௩-சினேகம், ௬-கலகம், ௯-பிரீதி.

இந்த சீதாசக்கரத்தில்கண்ட நெம்பரை ஒரு சிறுவனை கால்கை சுத்தம்செய்யச்சொல்லி ஒருபுஷ்பங்கொடுத்து நெம்பரை ஊணச்சொல்லி பலன்களைத் தெரிந்துக்கொள்ளவும்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

இராமதேவர் ஆஞ்சநேயருக்கு உபதேசித்த

உத்தமமத்திம சாஸ்திர[ம்]

௫	௨௭	௩௭	௩௯	௪௧௮
௮	௫௪	௩௪	௧௪௨	௨௧௯
௧0	௧௪	௮௪	௯௧0	௪௧௮
௯	௧௯	௪௩௨	௮00	௯௧௯
௧௧௨	௯௪	௫௨0	௩௩௪	௩௭௨
௧௩0	௭௨	௯௯	௪௧௨	௨௨0

இந்த உத்தமமத்திம சாஸ்திரம் பார்க்கப்பட்டவர்கள் சிறு குழந்தைகள் கையில் ஓர் புஷ்பத்தைக் கொடுத்து புஷ்பத்தால் இந்தநெம்பரில் ஏதாகிலும் ஒன்றை தொடச்சொல்லி அந்த நெம்பர்பிரகாரம் எடுத்து வாசித்துப்பார்த்தால் நன்மை தீமை எளிதில் அறிந்துக்கொள்ளலாம். இந்த சாஸ்திரத்தின் பாகமாயிருந்ததை அனேகர் வேண்டுகோளால் நூதனமாய் சேர்த்து அச்சிடப்பட்டது.

௫—அனுமார் எழுபதுவெள்ளஞ் சேனையை ஒடி மடக்கி மிஞ்சாதேயென்று நிறுத்தினவிடம், ஆகையாலிது நன்று.

௮—இராமசுவாமி வனவாசம் போனவிடம், ஆகையால் மனதில் நினைத்தகாரியம் அனுகூலமாகாது, மத்திபம்.

௧௦—அனுமார் இலங்காபுரியை தீயிட்டவிடம், [..]ு மத்திபம்.

௯—இராவணனுக்கும் சுக்ரீவனுக்கும் மல்யுத்[..] இது நன்றல்ல, ஆகையால் நினைத்தகாரியம் தாம[..]தில் அனுகூலமாகும்.

௧௧௨—வால்மீகர் வனத்தில் இராமசுவாமி வன[..]ாசனஞ் செய்தவிடம். இது மகா நல்லது, நினைத்த[கா]ரியம் சீக்கிரத்தில் கைகூடும் உத்தமம்.

௧௩௦—சீதாதேவி சிறையிருந்தவிடம். இது ஆ[கா]து, நினைத்தகாரியம் பலியாது மத்திபம்.

௨௭—இராமசுவாமியும் இலட்சுமணரும் இரகசியம்பேசின விடம், இது மகா உத்தமம்.

௫௪—இராமசுவாமிக்கும் சுக்ரீவனுக்கும்வாக்குவாதமான விடம், இது ஆகாது மத்திபம்.

௧௪—இராவணனை ஜடாயுமடக்கிப்போர்செய்துகெலிக்காமல்தோற்படைந்தவிடம், இதுஆகாதுமத்திபம்

௧௯—அங்கதன் தூதுபோனவிடம், இது வெகுலாபமுண்டு உத்தமம்.

௯௪—இராமசுவாமி தாடகையை ஜெயித்தவிடம் இதனால்அனேககாரியம்அனுகூலமாகும், உத்தமம்

௭௨—இராமசுவாமி கையால் கும்பகர்னன் மாண்டவிடம் இது நன்றல்ல மத்திபம்

௩௭—விபீஷணனுக்குப் பட்டங்கட்டினவிடம் இது மகாநல்லது நினைத்தகாரியம்ஜெயமுண்டு உத்தமம்

௩௪—இராவணன் சீதையை எடுத்துக்கொண்டுபோனவிடம் இது மத்திபம்.

௮௪—இராவணன் சீதாதேவியை சிறையில்வைத்தவிடம். நினைத்தகாரியம் ஜெயமில்லை. பயமுண்டு பகையாளிகளாலேகெடுதியுண்டு இதுஆகாது மத்திபம்.

௪௩௨—இராமசுவாமி மிதிலைக்குப்போகும்போது கற்சிலையைப் பெண்ணாக்கினவிடம் இதுமிகவும் நல்லது நினைத்தகாரியம் சித்தியாகும் உத்தமம்.

௫௨0—இராமசுவாமிக்கும் பரசுராமனுக்குயு
க்கம் நடந்தவிடம் இது ஆகாது மத்திபம்.

௯௬—இராமசுவாமி தபசுபண்ணினவிடம் இக
ரியம் ஆலசியத்தில் அனுகூலமாகும்.

௩௯—இராமசுவாமி சீதாதேவியைப் பறிகொ
த்து மனவியாகூலமாய் நின்றவிடம் இது மத்திபம்.

௧௪௨—இலட்சுமணப்பெருமாள் இந்திரசித்ன
ஜெயம்பண்ணினவிடம் இது மகாஉத்தமம்.

௬௧0—இராமசுவாமி சீதாதேவியை சிறைமீ
டினவிடம் இதுதாமதத்திற்காரியம் அனுகூலமாகும்.

௮00—இராமசுவாமிக்கும் சீதாலட்சுமிக்கும் க
லியாணமானவிடம் இது மகா நல்லது உத்தமம்.

௩௩௪—அனுமார் அசோகவனத்திற்குப்போய்
சீதையைக் கண்டு திருவாழிமோதிரங் கொடுத்தவிட
ம் ஆகையால் இது நல்லதுதான் உத்தமம்.

௪௧௨—ஸ்ரீராமர் சீதாதேவியைக்காணமல் மன
ம் திகைத்து நின்றவிடம் ஆகையால் நினைத்தகாரியம்
துயரமுண்டு எதிரியாலே பகையும் பொல்லாங்கும் வ
ரும் ஜெயமில்லை மத்திபம்.

௪௧௮—அனுமார் அசோகவனத்தை அழித்தவி
டம் இது ஆகாது மத்திபம்.

௨௧௬—அனுமார் இலங்காபுரியை ஜெயித்தவிட
ம் உத்தமம்.

௪௧௮—சொக்கநாதர் பிட்டுக்கு மண்சுமந்தவிட
ம் மகா உத்தமம்.

௬௧௬—கிருஷ்ணசுவாமி பவளக்கொடியாள் பா
ளையத்தைக்கத்தண்டுகொட்டி மாளச்செய்ததுமத்திபம்

௩௭௨—இராவணன் சீதையை சிறையெடுத்த
விடம் நினைத்தகாரியம் தாமதத்தில் முடியும்.

௨௨0—இராமர் ஆஞ்சநேயருக்கு ரகசியம் உப
தேசித்தவிடம் இது உத்தமம்.

உத்தமமத்திமசாஸ்திரம் முற்றிற்று.

இத்தொடுகுறிசாஸ்திர மியற்றிய கிரந்த[illegible]வின் அபிப்பிராய வாக்குக்கு அச்சுக்கூடத்தார் பொறுப்பன்று. ஆ. எ.



விளம்பரம்.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்:— சென்னை சூளை ஹைரோட்டில் ஸ்தாபித்திருக்கும், "பிரின்[illegible] வேல்ஸ்" பிரஸ் என்னும் அச்சுயந்திர[illegible]லையில், இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷையில் நூதனமாய் புத்தகம் முதலியவைகள் அச்சிடுபவர்களுக்கு அச்சுவேலைகளை மிகத் திருத்தமாகவும் நாணயமாக[illegible] காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும்.

ஷை அச்சுயந்திரசாலையில் பிழையறப் பரிசோதிக்கப்பட்ட தமிழ் புத்தகங்கள் சரியான விலைக்கு விற்கப்படும்.

இங்ஙனம்

ஆ–எதிராஜமுதலியார்,

Manager.